


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், சிறு, குறு விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்ததற்கான சான்றிதழ்களை, மறவன்குடியிருப்பு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இன்று (11.09.2016) வழங்கினார். தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 627 /2016 நாள்: 11.09.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், சிறு, குறு விவசாயிகளின் கூட்டுறவு கடன் தள்ளுபடி செய்ததற்கான சான்றிதழ்களை இன்று (11.09.2016) வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தேர்தலில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும்விதமாக, சிறு, குறு விவசாயிகள், கூட்டுறவு சங்கத்தில் பெறப்பட்ட விவசாய கடன்களை தள்ளுபடி செய்து, அதற்கான கோப்புகளில் கையெழுத்திட்டு, அதனை கூட்டுறவு துறையின் மூலம், செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், மறவன்குடியிருப்பு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் இன்று (11.09.2016) நடைபெற்ற நிகழ்ச்சியில் 221 சிறு, குறு விவசாயிகளின் அசல், வட்டி, அபராத வட்டி, இதர செலவினங்கள் என மொத்தம் ரூ. 219.43 இலட்சம் அளவிற்கு கடன்களை தள்ளுபடி செய்து, அதற்கான சான்றிதழ்களை விவசாயிகளுக்கு வழங்கி, மாவட்டம் முழுவதும் சான்றிதழ்கள் வழங்கும் பணிகளை தொடங்கி வைத்தார்கள்.

பின்னர் மாநிலங்களவை உறுப்பினர் திரு.அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஆறாவது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராக பதவியேற்றவுடன், விவசாயிகள் மற்றும் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, முதலில் ஐந்து முக்கிய திட்டங்களில் கையெழுத்திட்டார்கள். குறிப்பாக சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள விவசாயக் கடன் தள்ளுபடி செய்தும், திருமாங்கல்யத்திற்கு 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டத்தை, மீண்டும் உயர்த்தி 8 கிராம் தங்கம் போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து, அதனை மக்கள் முழுமையாக பெற்று பயனடைய செய்கின்ற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா மட்டும்தான் என தெரிவித்து, பின்னர், குறு, சிறு விவசாயிகள் கூட்டுறவு சங்கத்தில் பெறப்பட்டு, 31.03.2016 அன்று வரை நிலுவையிலிருந்த விவசாய கடன்களான குறுகிய கால பயிர் கடன், நகை மதிப்பீட்டின் பேரில் வழங்கப்பட்டுள்ள குறுகிய கால விவசாய கடன், மத்திய கால கடனாக மாற்றி அமைக்கப்பட்ட குறுகிய கால பயிர்கடன், மத்திய கால வேளாண்மை கடன்கள், பண்ணை சார்ந்த நீண்ட கால கடன்கள் என மொத்தம் 78 ஆயிரத்து 669 சிறு மற்றும் விவசாயிகளின் அசல், வட்டி,

அபராத வட்டி மற்றும் இதர செலவினங்கள் உட்பட ரூ.250.51 கோடி அளவிற்கு தள்ளுபடி செய்து, அதற்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன், கூட்டுறவு இணைப்பதிவாளர் திரு. இராஜேந்திரன், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார், துணை பதிவாளர் திருமதி. பிரியதர்ஷினி, மறவ்னகுடியிருப்பு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் தலைவர் திரு. எம். சகாயவென்னிஸ், செயலாளர் திருமதி. சரோஜினி, கண்காணிப்பாளர் திரு. ஏசுதங்கம், அரசு வழக்கறிஞர் திரு. ஞானசேகர், திரு. கனகராஜன், திரு. ரெஜீஸ்ராஜ், திரு. நாஞ்சில் சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.